DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 415/2024

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**A3 எதிரி ஆஜர் A2 died. A1 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | ரமேஷ் |
|---|---|
| Father / Husband Name | முனுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.**07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஓட்டகோவிலில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி சுரேஷை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 10.02.2024 ம் தேதி மாலை 3.00 மணிக்கு நானும் சுரேஷை கிளியாநகரில் உள்ள பள்ளி அருகே நின்று கொண்டிருந்தபோது கிளியாநகரில் உள்ள கோவில்களில் திருடு போனது சம்மந்தமாக போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் சுரேசும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. போலிசார் என்னை கையொப்பம் போட சொன்னார்கள் நான் போட்டேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்தபோது சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்து என்று நான் சரியாக படிக்கவில்லை. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும் சுரேசும் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 415/2024
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**A3 எதிரி ஆஜர் A2 died. A1 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சுரேஷ் |
| Father / Husband Name | நாராயணசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.**07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஓட்டகோவிலில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி ரமேஷை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 10.02.2024 ம் தேதி மாலை 3.00 மணிக்கு நானும் ரமேசும் நின்று கொண்டிருந்தபோது எங்கள் ஊரில் உள்ள கோவில்களில் திருடு போனது சம்மந்தமாக போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் ராமேசும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் கையொப்பம் செய்த இடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்கள் இருந்தார்கள். நான் என்ன விஷயமாக கிளியாநகருக்கு வந்தோம் என்ற விஷயத்தை காவலரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்து என்று தெரியும். படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அதில் கோவிலின் எதிரில் பள்ளியும் தென்கிழக்கில் ஆறுமுகத்தின் வீடும் தென் திசையில் உள்ள வீடுகளும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி விவரங்கள் அனைத்தும் தட்டச்சு செய்யப்பட்டிருந்து என்றால் சரிதான். நான் சம்பவயிடம் போகவில்லை என்றாலும் காவல் நிலையத்தில்வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 415/2024
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**A3 எதிரி ஆஜர் A2 died. A1 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ஆறுமுகம் |
| Father / Husband Name | நாராயணசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.**07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிளியாநகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி திருமுருகனை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாபது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 4 மற்றும் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 17.02.2024 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நானும் திருமுருகன் என்பவரும் மேல்மருவத்தூருக்கு செல்லும்போது செண்டிவாக்கம் நேமம் அத்திவாக்கம் சாலையில் இரண்டு நபர்களை போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு நபர் ஆஜர் எதிரி ஆவார். மேற்படி நபர்கள் திருடியதை ஒப்புக்கொண்டு பிரகாஷ் என்பவர் நேமம் அத்திவாக்கம் அருகே முட்புதரில் இருந்து 3 தூங்கா விளக்கு மற்றும் 2 மணிகள் எடுத்து கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் கேட்டார்கள். அதில் நானும் திருமுருகனும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரணையில் நானும் திருமுருகனும் இருசக்கர வாகனத்தில் சென்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். நான் காவல் நிலையம் அடிக்கடி சென்று வருவேனா என்றால் இல்லை. வேலு என்பவர் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது நானும் உடன் சென்றேன். என்னுடன் 5 நபர்கள் வந்தார்கள். எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய மணி மற்றும் தூங்காவிளக்குகளை எங்கள் கோவிலில் பார்த்தேனா என்றால் இல்லை. போலிசார் சொன்ன பிறகு தான் வழக்கு சொத்துகள் எங்களுடையது என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் நான் சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 415/2024

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**A3 எதிரி ஆஜர் A2 died. A1 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | திருமுருகன் |
|---|---|
| Father / Husband Name | எல்லப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிளியாநகரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி ஆறுமுகத்தை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 மற்றும் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது) கடந்த** 17.02.2024 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நானும் ஆறுமுகம் என்பவரும் செண்டிவாக்கம் பள்ளி அருகே சென்றபோது இரண்டு வாரத்திற்கு முன்பு எங்கள் ஊர் கோவிலில் திருடு போனது சம்மந்தமாக இரண்டு நபர்களை விசாரித்து கொண்டிருந்த போது நேமம் காட்டு பகுதியில் தூங்கா விளக்கு 3 பித்தளை மணி 2 ஆகியவற்றை முட்புதரில் இருந்து எடுத்து போலிசார் எடுத்துவந்தனர். காணாமல் போன பொருட்கள் கோவிலில் இருந்து திருடு போன பொருட்களை அடையாளம் காட்டுவதற்காக என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

2. கடந்த 17.02.2024 ம் தேதி நானும் ஆறுமுகம் என்பவரும் செண்டிவாக்கம் பேருந்து நிலையத்திற்கு சென்றோம் என்றால் ஆமாம். அப்போது போலிசார் எதிரி பிரகாஷ் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் ஆமாம். நானும் ஆறுமுகமும் அதில் கையொப்பம் செய்தோமா என்றால் ஆமாம். பின்னர் 5.30 மணிக்கு எதிரி பிரகாஷ் நேமம் காட்டு பகுதி முட்புதரில் இருந்து 3 தூங்கா விளக்கு 2 பித்தளை மணி ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து அதில் நானும் ஆறுமுகமும் கையொப்பம் செய்தோமா என்றால் ஆமாம். மேற்படி விவரங்களை நாங்கள் போலிசார் விசாரணையில் கூறினோமா என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை**

3. போலிசார் விசாரித்தபோது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். போலிசார் விசாரித்த இடத்தில் வேகத்தடை இருந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் பள்ளி உள்ளதால் வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்த வேலு என்பவருடன் நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் ஆமாம். எதிரிகளிடம் பொருட்களை கைப்பற்றிய நேரம் மாலை 4.30 மணியாகும். நான் சம்பவயிடத்தில் இருந்திருந்தால் எதிரிகளை அடையாளம் காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை எதிரி சதிஷ் மற்றும் பிரகாஷ் ஆகியோர் முட்புதரில் இருந்து கொண்டுவந்தார்கள். வழக்கு சொத்துக்களை என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றாலும் அவ்வாறு கைப்பற்றியிருந்தால் எதிரிகளை அடையாளம் காட்டியிருப்பேன் என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் அடிக்கடி சென்று வருகிறேன் என்றாலும் காவல் நிலையத்தில் வைத்துதான் கைப்பற்றுதல் மகசரிலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 415/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**A3 எதிரி ஆஜர் A2 died. A1 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | வேலு |
| Father / Husband Name | சடகோபன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.**07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிளியாநகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 08.02.2024 ம் தேதி எங்கள் ஊர் துரோபதி அம்மன் கோவில் பித்தளை மணி 2 தூங்கா விளக்கு 3 உண்டியல் பணம் மற்றும் எல்லையம்மன் என்கிற மாரி விசாலாட்சி கோவிலில் உண்டியல் பணம் ஆகியவை திருடு போனது. 09 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். 17 ம் தேதி காவல் நிலயைத்தில் என்னை அழைத்து அங்கு திருடு போன பொருட்களுடன் இரண்டு நபர்கள் அடையாளம் காட்டினார்கள். அதில் ஆஜர் எதிரி ஒருவர் ஆவார். மற்றொருவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் 3 தூங்காவிளக்குகள் மற்றும் இரண்டு மணிகள்எங்கள் கோவிலில் திருடு போன பொருட்கள் ஆகும். **(மேற்படி பொருட்கள் சபோஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. புகாரை யார் எழுதினார் என்றால் நான்தான் எழுதினேன். திருடு போன சம்யத்தில் நான் கோவிலில் இல்லை என்றால் சரிதான். 08.02.2024 ம்தேதி இரண்டு கோவில்களிலும் திருடு போனது. போலிசார் சொல்லிதான் எதிரிகளிடம் இருந்து திருடிய பொருட்களை கைப்பற்றிய விவரம் தெரியும் என்றால் சரிதான். எதிரிகளை சம்பவத்திற்கு முன்பு எங்கள் ஊரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. புகாரை நான் 09.02.2024 ம் தேதி கொடுத்தேன். கிளியாநகரில் இருந்து மேல்மருவத்தூருக்கு வர சுமார் 30 நிமிடம் ஆகும். திருடுபோன தினத்தன்று புகார் கொடுக்காமல் மறுநாள் ஏன் புகார் கொடுத்தேன் என்றால் திருடு போன சமயம் இரவு நேரம் என்பதால் நான் மறுநாள் விசாரித்து ஊர் தலைவருடன் சென்று புகார் கொடுத்தேன். மேற்படி முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் 161 வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எந்த பொருளும்

திருடு போகவில்லை என்றாலும் எதிரிகள் மீது போலிசார் போட்ட பொய் வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருடு போன பொருட்களின் அடையாளம் குறித்தும் மணியின் அளவுகளை குறித்தும் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.